செய்தி வெளியீடு எண்.729 நாள்.5.9.2008

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின். சென்னை 14 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் கண்ட இடங்களில் 13.09.2008 அன்று காலை 10.00 மணிக்கு மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக பொருட்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும், சென்னையில் உள்ள 14 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொளளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையருக்காக

## இணைப்பு – 1

| வ.எண் | அலுவலகம் | கூட்டம் நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | முத்தியாலுபேட்டை ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, 167/83, தம்பு செட்டி தெரு, மண்ணடி, சென்னை–1 |
| 2 | இராயபுரம் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சிமெட்ரி ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21 |
| 3 | பெரம்பூர் | கல்கி ரங்கநாதன் மான்போர்ட் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, 26/15 பாரதி 2–வது தெரு, பெரம்பூர், சென்னை–11 |
| 4 | அண்ணநகர் | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, சுப்பராயன் தெரு, செனாய் நகர், சென்னை/30, |
| 5 | அம்பத்தூர் | பிரிட்டானியா மேல்நிலைப்பள்ளி, அம்மன் கோயில் தெரு, பாடி, சென்னை–59 |
| 6 | வில்லிவாக்கம் | அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, எப் டைப் சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை–49 |
| 7 | திருவொற்றியூர் | ஸ்ரீகுருமூர்த்தி வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, ஆர்.வி.நகர், 1வது பிரதான சாலை, கொடுங்கையூர் மேற்கு. சென்னை–118 |
| 8 | தி.நகர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, 2.அம்மன் கோயில் தெரு, வடபழனி சென்னை–26, (முருகன் கோயில் அருகில்) |
| 9 | மயிலாப்பூர் | மீனவர் சமுதாயக் கூடம், முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம், சென்னை–28 |
| 10 | பரங்கிமலை | மறைமலை அடிகள் மேல்நிலைப்பள்ளி, பல்லாவரம் (பல்லாவரம் காவல் நிலையம் எதிரில்), சென்னை –43 |
| 11 | தாம்பரம் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, அனகாபுத்தூர், சென்னை –70 |
| 12 | சைதாப்பேட்டை | மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, மேற்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேடடை, சென்னை–15, |
| 13 | ஆயிரம் விளக்கு | சமூக நலக்கூடம் சொக்கலிங்கம் நகர், தேனாம்பேட்டை, சென்னை–18, |
| 14 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, 51, பங்காரு நாயக்கன் தெரு, சென்னை– 2, |

ஆணையருக்காக

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.